நூல் கொள்முதல்: ஆய்வு செய்யாமல் – பொறுப்பற்ற முறையில் பதில் சொல்வதா?

வெளிப்படையான விசாரணை கமிஷன் அமைத்து ஆய்வு செய்து அறிக்கை வெளியிடுக!

மல்லை சி.ஏ.சத்யா வலியுறுத்தல்!

சென்னை, நவ. 10 - திராவிட வெற்றிக் கழகத் தலைவர் மல்லை சி.ஏ.சத்யா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஐ.நா. மன்றத்தின் யுனெஸ்கோ அமைப்பு தென் கிழக்கு ஆசியாவின் சாக்கரடீஸ் என்று போற்றப் பட்ட பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் பெயரில்

முன்னாள் முதல மைச்சர் தளபதி அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் மேற்கு மண்டலம் கோவையில் 300 கோடி ரூபாய் மதிப் பீட்டில் கட்டப்பட்ட பெரியார் அறிவுலக நூலக கட்டுமானம் உலகத் தரத்தில் நேர்த்தியாகவும் தரமாகவும் கட்டப் பட்டுள்ளது என்பதை மறுப்பார் யாரும் இல்லை.

இங்கே எழுத்தாளர் பெருமாள் முருகன் அவர்களின் குற்றச்சாட்டு கோவையில் 300 கோடி ரூபாயில் கட்டப் பட்ட பெரியார் அறிவுலக நூலக கட்டிடத்தின் தரத்தின் மீது அல்ல நூல்கள் கொள்முதல் செய்ததில் முறைகேடு தவறு நடந்து உள்ளது



என்று சுட்டிக் காட்டி உள்ளார்.

யானை வாங்கியதில் தவறு நடைபெறவில்லை, அதற்கு அங்குசம் வாங்கியதில் ஊழல் நடந்துள்ளது என்பதை அறிவுலம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எல்லா பூட்டுக்கும் ஒரே சாவியைப் போன்று த.வெ.க. அரசு பொறுப்பு ஏற்று ஆறுமாதங்கள் உருண்டோடி கொண்டு இருக்கும் நிலையில் சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர் மற்றும் அதிகாரிகள் பொறுப்புணர்வுடன் துறையை முழுமையாக ஆய்வு செய்யாமல் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று இதற்கு காரணம் கடந்த கால திமுக ஆட்சி என்று பொத்தாம் பொதுவாக மாக்கியவல்லி அரசியல் பாணியில் பொறுப்பற்ற முறையில் பதில் சொல்லி வருகின்றார்கள்.

எங்கே தவறு நடந்தது என கண்டறிய வேண்டும்!

அறிவுக் கருவூலங்களான புத்தகங்களை வாங்கியதில் எங்கே தவறு நடந்து உள்ளது.

அறிவுச் சாளரமான நூலகத்தில் நஞ்சை அள்ளிப் போட்ட பிற்போக்கு சக்தி எது எமது கருத்தியல் எதிரிகள் பெரியார் அறிவுலக நூலகத்தில் தங்கள் கை வண்ணத்தை காட்டி உள்ளனரா என்று கண்டறிய வேண்டும்

அகல் விளக்கு, மீனிக்ஸ் போன்ற அச்சகத்தின் நூல்களை கொள்முதல் செய்ய சொன்ன அரிச்சந்திர மகாபிரபு யார் என்பதை கண்டறிந்து சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய தமிழ் நாடு அரசு கடந்தகால திமுக ஆட்சி மீது பழியை போட்டு விட்டு தப்பிக்க முயற்சிப்பதாக என்னத் தோன்றுகிறது,

தமிழர் அடையாளங்கள் மீட்டுருவாக்கம்!

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போதெல்லாம் தமிழர்களின் அடையாளங்களை மீட்டுருவாக்கம் செய்து பாதுகாத்து வந்துள்ளது,

1967 ஆம் ஆண்டு தமிழ்த் தாயின் தலைமகன் பேரறிஞர் அண்ணா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பு ஏற்று இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடத்தி தமிழறிஞர் பெருமக்களுக்கு சென்னை மெரினா கடற்கரையில் சிலைகள் வைத்தது இருந்து முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக்காலத்தில்

2000 ஆண்டின் புத்தாயிரம் கொண்டாட்டத்தின் நினைவாக ஆதித் தமிழினத்தின் முற்றிய ஞானத்தின் அடையாளமாகத் திகழும் பிறப்புஒக்கும் எல்லா உயிர்க்கும் என்ற உலகப் பொதுமறையைத் தந்த திருவள்ளுவருக்கு கன்னியாகுமரி கடலில் 133 அடி உயர சிலை,சென்னை நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டம்,

தமிழர்களின் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்திற்கு நாகை மாவட்டம் பூம்புகாரில் கண்ணகிக் கோட்டம் அமைத்தது, ஆங்கில ஏகாதிபத்தியத்திடம் மண்டியிடாத வீரத்திற்கு சொந்தக் காரர்களான வீரபாண்டிய கட்டபொம்மன் உள்ளிட்ட பாளையக்காரர்களுக்கு நினைவு மணிமண்டபம்.

திராவிட கருத்தியலின் முதல்வர் அயோத்திதாசர்,கர்மவீரர் காமராஜர் உள்ளிட்ட நாட்டுக்கு உழைத்திட்ட பெருமக்களுக்கு நினைவு மண்டபம் சிலைகளை எழுப்பியது,

மறைந்த தமிழறிஞர்களின் நூல்களை நாட்டுடைமை ஆக்கியது

உலகப் புகழ் பெற்ற எகிப்தின் அலெக்சான்றிய நூலகம் இலங்கையில் ஈழத் தமிழர்களின் வரலாற்று தலைநகரம் யாழ்ப்பாண நூலகம் போன்று சென்னை கோட்டூர் புரத்தில் கட்டப்பட்ட பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அமெரிக்கா நாட்டின் வெளிவிவகாரத் துறை அமைச்சர் ஹில்லாரி கிளிண்டன் பார்வையிட்டு பாராட்டியது என்று அங்கிங்கெனாதபடி எங்கும் வரலாறு பேசும் வகை செய்தது திராவிட இயக்க ஆட்சியே .

எல்லா காலத்திலும் ஏமாற்ற முடியாது!

திரை மோகத்திலும் மது மயக்கத்திலும் சிக்குண்ட தமிழனின் தொடையில் திரித்தவரை லாபம் என்று ஆட்சியாளர்கள் எண்ணி விடக்கூடாது சிலரை சில காலமும் பலரை பலகாலமும் ஏமாற்றலாம். ஆனால் எல்லோரையும் எல்லா காலத்திலும் ஏமாற்ற முடியாது,

பெரியார் அறிவுலக நூலகத்திற்கு அறிவுக் கருவூலங்களான புத்தகங்களை வாங்கியதில் ஏற்பட்டுள்ள முறைகேடுகளை நாட்டு மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் வெளிப்படையான விசாரணை கமிஷன் அமைத்து ஆய்வு செய்து அறிக்கை வெளியிட வேண்டும் என்று தமிழ் நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்களின் தலைமையிலான தவெக அரசை திராவிட வெற்றிக் கழகத்தின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

அந்துமணி சிந்துமணி



அந்துமணி : ஏண்டி சிந்து, "மேகதாது அணைகட்ட யாரிடமும் அனுமதி வாங்க வேண்டிய அவசியமில்லை" அப்படின்னு எவ்வளவு திமிரா கர்நாடக முதலமைச்சர் சொல்லி இருக்காரு! கேக்க யாருமில்லையா?

சிந்துமணி : ஆமாண்டி அந்து; அவங்க எந்தக் காலத்திலே தமிழ்நாட்டை மதிச்சிருக்காங்க; இங்க இருக்கிற காங்கிரஸ் காரங்க 'சட்டம்' பேசுவாங்களே தவிர, வாய்திறந்து அங்கே போய் கேக்க மாட்டாங்க. அவங்களை கூட்டணியிலே வெச்சுட்டு இருக்கும் செயலற்ற த.வெ.க. பத்தி சொல்லவே வேண்டாம். தமிழ்நாடுதான் பாவம்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஒழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(8.11.2026 - 9.11.2026)



1. சென்னை துரைப்பாக்கத்தை அடுத்த செம்மஞ்சேரியில் குடும்பத் தகராறு காரணமாக கூலித் தொழிலாளி இரும்புக் கம்பியால் தாக்கிக் கொலை.

2. நெல்லை மாவட்டம் முக்கூடல் அருகே பாப்பாக்குடியில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்க்கும் இளம் பெண் கழுத்தை நெரித்துக் கொலை.

3. விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அருகே தாமனூரில் அரசு உதவி பெறும் பள்ளியில் ஆறாம் வகுப்பு படிக்கும் மாணவியிடம் பாலியல் தொல்லை கொடுத்த பள்ளி தலைமையாசிரியர் சிக்கினார்.



4. சென்னை அயனாவரத்தில் மாநகரப் பேருந்தில் பயணம் செய்த கல்லூரி மாணவிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த வாலிபர் சிக்கினான்.

5. தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூரில் ஐந்து வயது சிறுமிக்குப் பாலியல் தொல்லைக் கொடுத்த மாநகராட்சி இன்ஜினியர் சிக்கினார்.

6. தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிபட்டி அருகே உள்ள அரசுப் பள்ளியில் பயிலும் மாணவிகளை தொடர்ந்து பாலியல் சீண்டல் செய்து, தட்டிக் கேட்ட பெற்றோர்களை தாக்க முயன்ற கூலித் தொழிலாளி சிக்கினான்.

7. சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் பொழுதுபோக்கு வந்த காதலர்களிடம் கத்தியை காட்டி மிரட்டி செல்போன் மற்றும் நகைகளை பறித்த கும்பல், தொடரும் வழிப்பறிகளால் பெசன்ட் நகர் கடற்கரையில் பொதுமக்கள் பீதி.

8. சென்னை பிராட்வே என். எஸ். சி. போஸ் சாலையில் சவாரிக்காக காத்திருந்த ஆட்டோ ஓட்டுநரை சரமாரியாக தாக்கி பணம் பறித்த ரவுடி சிக்கினான்.



9. சென்னை புளியந்தோப்பு அருகே கத்தியை காட்டி மிரட்டி பொதுமக்களிடம் தீபாவளி வசூல் செய்த இரண்டு ரவுடிகள் சிக்கினர்.

10. சென்னை ஓட்டேரி அடுத்த பெரம்பூர் பேரக்ஸ் ரோட்டில் கன்று குட்டியை தாக்கியதை தட்டிக் கேட்ட உரிமையாளருக்கு சரமாரியாக அரிவாள் வெட்டு.

11. சென்னை தங்க சாலையில் மது அருந்தியதை தட்டிக் கேட்டதால் வீட்டுக்கு வந்து பெண் மீது சரமாரியாக தாக்குதல், நகை பணத்தை திருடிச் சென்ற கும்பல்.


12. சென்னை யானைக்கவுனி காவல் நிலையத்தில் குற்ற வழக்கில் கைதான கைதி கழுத்தை அறுத்துக் கொண்டு தற்கொலை முயற்சி, பரபரப்பு.

13. தேனி மாவட்டம், சமதர்மபுரம் அருகே தீபாவளி நாளன்று சாலையை மறித்து பட்டாசு வெடித்து ரீல்ஸ் எடுத்த கும்பலைத் தட்டிக்கேட்ட சிறப்பு உதவி ஆய்வாளர் (SSI) செந்தில் குமார் அடித்துக் கொலை

14. சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே வேலூர் கிராமத்தில் முன்விரோதம் காரணமாக கொலை வழக்கில் ஜாமினில் வெளியே வந்த ரவுடி வெட்டிக்கொலை...

15. திருச்சி மாவட்டம் சமயபுரம் சுங்கச்சாவடி அருகே முன்விரோதம் காரணமாக கூலி வேலை செய்யும் இரண்டு சிறுவர்கள் வெட்டிக் கொலை ...

16. நெல்லை மாவட்டம் முக்கூடல் அருகே சமூக வலைதளத்தில் மனைவி அதிக நேரம் செலவழித்ததை கண்டித்து கழுத்தை நெரித்துக் கொலை செய்த கணவன் ...



17. திருவள்ளூர் மாவட்டம் சென்றான் பாளையத்தில் உள்ள காட்டுப் பகுதியில் இளம் பெண் கத்தியால் குத்திக் கொலை....

18. கடலூர் மாவட்டம், பெரியகட்டுப்பாளையம் பகுதியில் நண்பர்களுக்குள் ஏற்பட்ட வாய் தகராறில் ரவுடி கத்தியால் குத்திக் கொலை...

19. சென்னை வண்ணாரப்பேட்டை கல்லறை சாலையில் உள்ள டாஸ்மாக் கடையில் பாதுகாப்புப் பணியில் இருந்த இரண்டு போலீசார் மீது போதை ஆசாமிகள் தாக்குதல் ...

ஆண்டியும் போண்டியும்

ஆண்டி : ஏன்ய்யா; அடுத்த மழை காலத்திற்குள் சென்னை சாலைகள் எல்லாம் தேசிய நெடுஞ்சாலை தரத்தில் இருக்கும்ன்னு அமைச்சர் ஆதவ் அர்ஜுனா தெரிவித்துள்ளாரே தெரியுமா?

போண்டி : ஆமாய்யா; எவ்வளவு வேகமாக செய்யப் போறாங்களோ இல்லியோ? இந்த மழை காலத்தில் ரோடு அப்படியே இருக்கப் போகுதுன்னு சொல்லாம சொல்லி இருக்காங்கன்னுதான் நான் நினைக்கிறேன். ஓட்டுப் போட்ட மக்கள்தான் பாவம்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

குன்னூர் மு. அரங்கநாதன்
நவம்பர் 10 (2014)



நீலகிரி மாவட்டத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

குன்னூர் நகர பொருளாளர், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

குன்னூர் நகராட்சித் தலைவர், குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் நலப்பணிகளை சிறப்பாக செயல்படுத்தியவர்.

கழகப் பணியில் தொய்வு ஏற்படக்கூடாது என்று திருமணம்கூட செய்து கொள்ளாதவர்.

இந்தி எதிர்ப்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து பலமுறை சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

செஞ்சி பி-ஏரிக்கரையில் அமைக்கப்பட்ட

சில்வர் கைப்பிடியை சேதப்படுத்திய மர்ம நபர்கள்!

முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் ஆய்வு!

செஞ்சி, நவ.10 –

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி பேரூராட்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள பிஏரிக்கரையில் அமைக்கப்பட்ட சில்வர் கைப்பிடி தடுப்புகளை மர்ம நபர்கள் சேதப்படுத்தியுள்ளனர். சேதமான பகுதிகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆய்வு மேற் கொண்டார்.

செஞ்சி பேரூராட்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள பிஏரியை அழகுபடுத்தி, நடைப்பயிற்சி மேற்கொள்ளும் வகையில் கடந்த திமுக ஆட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் 1 கோடியே 93 லட்சம் மதிப்பீட்டில் பிஏரியை மேம்படுத்தி பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

இதில் நடைபயிற்சியில் ஈடுபடுபவர்கள் பாதுகாப்பாக செல்வதற்கு சில்வரி லான தடுப்பு கைப்பிடிகள் பி–ஏரியை சுற்றிலும் அமைக்கப்பட்டது.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு மர்ம நபர்கள் சில்வர் கைப்பிடி தடுப்புகளை சேதப்படுத்தி உள்ளனர். இதனால் ஏரிக்கரையில் நடைபயிற்சி மேற்கொள்ளும் பொதுமக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

இதுகுறித்து தகவல் அறிந்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் ஆகியோர் பிஏரிக்கரைக்கு நேரில் சென்று சேதப்படுத்தியிருந்த சில்வர் கைப்பிடி தடுப்புகளை பார்வையிட்டனர். இதில்முன்னாள் மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை மாவட்ட பிரதிநிதி பிரகாஷ் தொண்டரணி பாஷா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

மேலும் இதுபோன்ற செயலில் ஈடுபடும் நபர்களை கண்டுபிடித்து அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுப்பதற்கு போலீசில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களின் பயன்பாட்டிற்காக லட்சக்கணக்கில் செலவு செய்து அமைக்கப்பட்ட கைப்பிடிகளை சேதப்படுத்திய சம்பவம் செஞ்சியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

த.வெ.க. ஆட்சியில் அதிகரிக்கும் கஞ்சா புழக்கம் - செங்கத்தில் பொதுமக்கள் அச்சம்!

செங்கம், நவ. 10 - செங்கம் அருகே கஞ்சா போதையில் இரு இளைஞர்கள் பொதுமக்கள் பயன்படுத்தும் குடிநீர் மினி டேங்க், மோட்டார் மற்றும் மின்சாதனங்களை உடைத்து சேதப்படுத்தியது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் அருகே மேல்பள்ளிப்பட்டு பகுதியில், குண்டு சந்தோஷ், குமரேசன் ஆகிய இருவர் கஞ்சா போதையில் சுற்றியுள்ளனர்.

அப்போது, குடிநீர் தொட்டியின் மின்சார வயர்களை அறுக்க முயன்றதுடன், அப்பகுதி பெண்களை ஆபாசமாகப் பேசி, கற்களால் தொட்டி மற்றும் மீட்டர் பாக்ஸ் உள்ளிட்ட வற்றை சேதப்படுத்தியுள்ளனர்.

இந்த மினி டேங்க் மூலம் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீர் பெற்று வருகின்றன.

ஏற்கனவே இதே நபர்கள் கடந்த மாதமும் குடிநீர் தொட்டியை சேதப்படுத்தியதாகவும், புகார் அளித்தும் போலீசார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

பொதுமக்களின் குடிநீர் வசதியைப் பாதிக்கும் வகையில் தொடர்ந்து கஞ்சா போதையில் அட்டகாசத்தில் ஈடுபடுவோர் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல்துறை மற்றும் மாவட்ட நிர்வாகத்திற்கு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

த.வெ.க. ஆட்சியில் கஞ்சா உள்ளிட்ட போதை பொருட்கள் அதிரித்து வருவதால் பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர்.